சங்கீதா பிக்சர்ஸ்
நால்வர்
Sangeetha Pictures

சங்கீதாவின் “**நால்வர்**”

நடிகர்கள்

ஏ. பி. நாகராஜன்	....	மோகன்
வி. எஸ். நடேசன்	....	வாசன்
என். என். கண்ணப்பா	....	ராஜன்
எம். என். கிருஷ்ணன்	....	பாலன்
ஆர். பாலசுப்ரமண்யம்	....	சிவசங்கரம் பிள்ளை
என். எஸ். நாராயண பிள்ளை	....	தர்மலிங்கம் பிள்ளை
ஈ. ஆர். சகாதேவன்	....	பானர்மென்
வி. எம். ஏழுமலை	....	வடமலை
எஸ். எஸ். மஜீத்	....	பால்ராஜ் [வக்கீல்]
கே. என். கனகசபை	....	மாஜிஸ்ட்ரேட்
ஸி. ஆர். நடராஜன்	....	பப்ளிக் பிராசிக்யூட்டர்
ஏ. ஆர். தாமோதரம்	....	இன்ஸ்பெக்டர் ராமசாமி
டி. கே. சாமிநாதன்	....	ரிக்ஷாக்காரன்
டி. வி. சத்யமூர்த்தி	....	சிங்காரம்பிள்ளை

கௌதமதாஸ், வரதராஜன், ராஜு, பூபதி, மாரிமுத்து.

நடிகைகள்

குமாரி தங்கம்	....	கமலா
டி. பி. முத்துலக்ஷ்மி	....	பங்கஜம்
எஸ். ஆர். ஜானகி	....	காமாட்சி
விஜயகுமாரி	....	லட்சுமி
ரத்னகுமாரி	....	அம்புஜம்

பின்னணி பாடியவர்கள் : எம். எல். வசந்தகுமாரி, யூ. ஆர். சந்திரா
என். எல். கானசரஸ்வதி, ரத்னமாலா,
கே. ராணி, குருவாயூர் பொன்னம்மா,
திருச்சி லோகநாதன், ஏ.பி. நாகராஜன்,
கே. வி. மஹாதேவன்.

நடனம் : **குமாரி கமலா, ரீடாபாய், சுலோசனா.**

கோவை சென்ட்ரல் ஸ்டுடியோவில் தயாரிக்கப்பட்டது.

Recorded on RCA Sound System

சிருஷ்டிகர்த்தாக்கள்

டைரக்ஷன் :	**வி. கிருஷ்ணன்**
கதை, வசனம் :	**ஏ. பி. நாகராஜன்**
பாடல்கள் :	தஞ்சை ராமையாதாஸ், அ. மருதகாசி, கா. மு. ஷெரீப்
இசையமைப்பு :	கே. வி. மஹாதேவன்.
நடன அமைப்பு :	ஹீராலால்
ஒளிப்பதிவு :	ஜே. ஜி. விஜயம்.
உதவி	கே. ராமச்சந்திரன், வி. கிட்டான்.
ஒலிப்பதிவு :	ஸி. வி. ராமசாமி. பி.ஏ..
உதவி	பி. கோவிந்தன் நாயர், என். பழனியப்பன்.
பாடல்கள் ஒலிப்பதிவு:	டி. எஸ். ரங்கசாமி (ரேவதி ஸ்டுடியோஸ்)
உதவி	ஆர். எஸ். ராஜன், கே.வி. வாசுதேவன்
லாபரேட்டரி :	ஸி. ஏ. சுந்தர்ராஜ்.
உதவி	எம். சுப்ரமண்யம்.
எடிடிங் :	டி. விஜயரங்கம்.
உதவி	ஈ. வி. ஷண்முகம்.
ஸ்டில்ஸ் :	கே. அனந்தன்
ஆர்ட் & செட்டிங்ஸ்:	எம். பி. குட்டியாப்பு. ஏ. கே. பொன்னுசாமி.
உதவி	எஸ். ஸி. வெங்கட்ராமன் (ஆர்ட்) குட்டி ஆச்சாரி (செட்டிங்ஸ்)
மேக்கப் :	பி. சங்கர் ராவ் நிபாத்கர், கே. ஆர் ராகவன், எஸ். ஆர். சுடலை.
ஆடையலங்காரம் :	டி. ஏ. மாதவன்.
புரொடக்ஷன் மேனேஜர் :	ஜி. மணி (ஸ்டுடியோ) கே. வெள்ளியங்கிரி ,, எஸ். ஏ. ஆறுமுகம் (சங்கீதா)
தயாரிப்பு நிர்வாகம் :	வி. தியாகராஜன், எஸ். சுந்தரேசன்.
அசோசியேட் டைரக்ஷன் :	கே. ஆர். சுந்தரேசன்.
உதவி	எஸ். ராஜேந்திரன்.

"நால்வர்"—கதைச்சுருக்கம்

கபாலி மில்லின் காரியதரிசியான தர்மலிங்கம் பிள்ளையின் புதல்வர் "நால்வர்"

முதல்வன் மோகன்—சப்-இன்ஸ்பெக்டர்
அடுத்தவன் வாசன்—வக்கீல்
இன்னொருவன் ராஜன்—கபாலி மில் சூப்ரவைஸர்
இளையவன் பாலன்—சீர்திருத்தவாதி

இவர்களைப் பெற்ற தாய் காமாட்சி.

கபாலி மில் பூரண உரிமையாளரான சிவசங்கரம் பிள்ளையின் செல்வப் புதல்வி கமலா. B.A. படித்துப் பட்டம் பெற்றவள். லேடீஸ் கிளப் ஆண்டு விழாவுக்காக ஒரு நாள் கமலா சைக்கிலில் ஒன்வே ட்ராபிக்கில் தவறான பாதையில் போய் விடுகிறாள். அதை மோகன் கண்டிக்கிறான். காரியதரிசியின் மகன்தான் மோகன் என்பதை உணராமல், அவனிடமே ரிப்போர்ட் செய்யப் போய், மோகன்தான் தன்னை மிரட்டியவன் என்பதை அறிந்து. வெட்கமடைந்து வீடு திரும்பு கிறாள். வாசன் கமலாவை கண்டது முதல் அவள்மேல் காதல் கொள் கிறான்.

கபாலி மில்லில் போனஸ் கொடுக்காததை முன்னிட்டு ராஜனும் அவனுடைய சகாக்களும், போனஸ் இல்லையேல் "வேலை நிறுத்தம் செய்வோம்" என்று அறிக்கை விடுக்கிறார்கள். சிவசங்கரம் பிள்ளை மோகனை அழைத்து ரிப்போர்ட் செய்கிறார். என் தம்பியானாலும் தவறு செய்தால் தண்டனை அனுபவிப்பான் என்று சொல்லிப் போகிறான். கடமை தவறாதவன் மோகன் என்று அவன் மேல் கமலா காதல் கொள் கிறாள். மோகனை நேரில் வரவழைத்து, தன் எண்ணத்தை உரைக்கிறாள். மோகன் அதை வெறுக்கிறான். ஆனால் மோகனின் தாயாரிடமும் தான் மோகனை மணக்க விரும்புவதாக கூறுகிறாள். தன் தகப்பனிடமும் விபரத்தை உரைக்கிறாள். அனைத்திற்கும் மோகன் மறுத்து விடுகிறான். கமலா தன் அண்ணனை நேசிப்பதை உணர்ந்த வாசன் கமலாவை மறந்துவிடுகிறான.

பிரபல சிங்கப்பூர் வியாபாரியான சிங்காரம் பிள்ளையின் ஒரே மகளான பங்கஜம் இளம் விதவை. தாயையும் தன் கணவனையும் இழந்த பங்கஜம். இதே ஊரில் வந்து வசித்துக்கொண்டிருக்கிருள். தற்செயலாக பங்கஜத்தை சந்தித்த பாலன் அவள்மேல் காதல் கொள்கிருன். அவளும் நேசிக்கிருள். சீர்திருத்த மணம் புரிவதாக வாக்களிக்கிருன்.

கபாலி மில்லில் ராஜன் தன் சகாக்களோடு வந்து வேலை நிறுத்தம் செய்கிருன். மோகன் எவ்வளவோ எச்சரிக்கை செய்தும், மறுத்து விடுகிருன். முடிவில் மோகன் ராஜனைச் சுட்டுவிடுகிருன். ஆஸ்பத்திரியிலிருந்து ராஜன் தப்பி ஓட முயற்சி செய்யும்போது, தாயார் காமாட்சி வந்து, வீட்டிற்கு கூட்டிப்போய், யாருக்கும் தெரியாமல் ஒரு அறையில் ஒளித்து வைக்கிருள். அதையும் பார்த்து விடுகிருன் மோகன். ராஜனை கைது செய்யப்போகிருன். அதே சமயம் வாசன் வந்து ராஜனை மீட்டு வருவதாக வாக்களிக்கிருன்.

நீதி மன்றத்தில் வாதாடி, வாசன் ராஜனை மீட்கிருன். இதன் காரணமாக சிவசங்கரம் பிள்ளைக்கும், தர்மலிங்க பிள்ளைக்கும், மனஸ்தாபம் வருகிறது. முடிவில் சிவசங்கரம் பிள்ளை சதி செயல் புரியத் திட்டமிட்டு, தர்மலிங்க பிள்ளையிடம், லாபத்தில் பங்கு கொடுப்பதைப் போல, தங்கக் கட்டிகளும், ரூபா நோட்டுகளும் கொடுத்து விட்டு, போலீசுக்கும் எச்சரிக்கை செய்து விடுகிருர். மோகன் தன் தகப்பனுர் கள்ளத்தனமாக சம்பாதித்தாக சந்தேகப்பட்டு அவரைக் கண்டித்து கைது செய்யப்போகிருன். அதே சமயம் தாயார் வந்து கதறுகிருள். மோகனை வெறுப்பாக பேசுகிருள். சிவசங்கரம் பிள்ளை போன் மூலம் சொன்னதை கேட்டு இன்ஸ்பெக்டர் ராமசாமி மோகன் வீட்டுக்கு வருகிருர். அந்த சமயம் மோகன் கையில் தங்கக் கட்டிகளும், ரூபா நோட்டுகளும் வைத்திருக்கிருன். வேருென்றும் செய்ய வகையில்லாமல் பெற்றவரைக் காட்டிக் கொடுக்காமல் தானே லஞ்சம் வாங்கிச் சேர்த்ததாக சொல்லி, மோகன் கைதியாகிருன்.

பிறகு, மோகன் நிலை என்ன...?

கமலா முடிவு என்ன...?

மற்ற மூவர் என்ன ஆனுர்கள்...?

என்பதை எமது வெள்ளித்திரையில் கண்டு ஆனந்திக்கவும்!

"நால்வர்"—பாடல்கள்

1.

இயற்றியது : அ. மருதகாசி பாடியது : கானசரஸ்வதி

பல்லவி

அருள் தாரும் எமதன்னையே—உன் பாதம்
அடைக்கலம் திருமங்கையே—அம்பா.... (அருள்)

அனுபல்லவி

வாழ்வளிக்கும் அருளே! தாழ்வகற்றும் பொருளே!
மதி தரும் நிதியான மாணிக்கமே நல்ல.... (அருள்)

சரணம்

நிலவளம் தனைக் காக்கும் மழை வளம் வேண்டும்!
நிதிவளமே கொடுக்கும் தொழில் வளம் வேண்டும்!
நீதியுடன் நேர்மை நிலைத்திடவே வேண்டும்!
நிலவிடும் கலையாவும் வளர்ந்திட வரம் வேண்டும்!.... (அருள்)

2. "படித்த பெண்ணும் குடும்ப வாழ்வும்" நாட்டியம்

இயற்றியது : அ. மருதகாசி
பாடியது : யூ. ஆர். சந்திரா, ரத்னமாலா.

வனஜா: அகப்பட்டுக் கொண்டாயா?—நீ
அகப்பட்டுக் கொண்டாயா?
அடிமைத் தளையின் இரும்புப் பிடியில்.... (அகப்)
படித்ததும் B.A. பட்டம் பெற்றதும்
பழமைக்குப் பணிந்திடத் தானா?-குடும்ப
பாரத்தை சுமத்திடத்தானா?
பட்டிக் காட்டுப் பெண் போலவே உடை
கட்டி வாழ்ந்திடத்தானா? சரிதானா?.... (அகப்)

கிரிஜா: புறப்பட்டு விட்டாயா?—நீ
புறப்பட்டு விட்டாயா ?
புதுமைப் பெண்ணே புயல் வேகத்தில்.... (புறப்)
படித்ததும் B.A. பட்டம் பெற்றதும்
பழமையைத் தாக்கிடத் தானா?—குடும்ப
பாரத்தை நீக்கிடத் தானா?

"பாஷன்" என்று பகல் வேஷமிட்டு வெறும்
பதவி சுமந்திடத் தானா? சரிதானா?.... (புறப்)

வனஜா: போதும் அளக்காதே கொஞ்சம் நில்லு!—நாம்
ஏதுக்குப் படித்தோ மென்று சொல்லு!

கெஜல்

மாமியெனும் டிக்ட்டேட்டர் சட்டம் போட
நாத்தியெனும் சி. ஐ. டி. கண் காணிக்க—நாம்
சாமியெனும் கணவன் அதை ஆமோதிக்க
சமயம் வந்தால் நம்மை ரெண்டு போட்டுத் தீர்க்க

பாட்டு

வாய்இருந்தும் பேசாமல்–உணர்ச்சியைக்காட்டாமல்
தாய்மை அடைந்து—அழகை இழந்து
தவியாய் தவித்திடவே தானா?—நீசொல்லு....(போதும்)

கிரிஜா: படித்தது அறிவை வளர்க்க—குடும்ப
பாரத்தை நன்றாக வகிக்க

கெஜல்

மாமி ஒரு 'சர்வெண்ட் மெய்டு'
கணவன் ஒரு 'பாடிகார்டு' –நாம் மட்டும்தான்
ராணியென உனைப்போல நினைக்கின்ற
மருமகளும் நாட்டிலுண்டு
மாமி தனை தாயாய், கணவனை தெய்வமாய்
மதித்து வாழ்ந்தால்
பூமியிலே துன்பமில்லை! ஏன் நீயும்
வீணாகப் புலம்புகின்றாய்?

பாட்டு

தாய்மை ஸ்தானத்தை எண்ணி பயந்தால்
தழைத்திடுமோ இந்த உலகம்—கொஞ்சம்
சிந்தித்துப்பார் பயம் விலகும்!

வனஜா: சிந்தனை செய்தது போதும்—கன்னியாய்
வாழ்ந்தா லென்ன எப்போதும்?

கிரிஜா: நிந்தனை யின்றி பெண்கள் வாழவே
நிச்சயம் ஆகணும் மணமே!

கந்த மலர் வனம் தனக்குக் காவலாய்
இருக்கணும் வேலி பலமே!

வனஜா: வேலி இல்லாவிடில் என்ன நேர்ந்திடும்?
கிரிஜா: விரும்பும் எல்லோரும் பறிக்க நேர்ந்திடும்!
மலரை எல்லோரும் பறிக்க நேர்ந்திடும்!
வனஜா: மலருக்கு மனமில்லை என்றால்—அதை
மற்றவர்கள் அணுகவும் ஆகுமோ?
கிரிஜா: வலுவில் பறிக்க வந்தாலே—எதிர்க்க
மலருக்கு வலிமையும் ஏது? [வனஜா சிந்தனை]

கெஜல்

மரஞ்செடிகள், மிருகங்கள் கூட ஆண், பெண்
வகையிரண்டாய் தோன்றி இனம் வளர ஒன்றாய்
வாழுகின்ற காட்சி கண்டும் இயற்கைக்கே தான்
மாறாக நீ நடக்க எண்ணலாமோ?
[இப்போ விளங்கியதா?]

வனஜா: ஓ எஸ்! வெரிமனி தாங்க்ஸ்—வர்ரேன்!
வெகு சீக்கிரம் இன்விடேஷன் தர்ரேன்!
இருவரும்: குட்பை—குட்பை—குட்பை

3.

இயற்றியது :
கா. மு. ஷெரீப்

பாடியது:
யூ. ஆர். சந்திரா, பொன்னம்மாள்.

(1)

வள்ளுவனார் செய்த தொழில்—மகாத்மா
காந்தி புகழ்ந்த தொழில்
நல்லதொரு குடிசைத் தொழில்—நாங்கள்
செய்யும் நெசவுத் தொழிலே!

(2)

ஐயா வாங்க! அம்மா வாங்க!
இது—அழகான கைத்தறி சேலை பாருங்க!
நல்ல வேட்டி வாங்குங்க!
அஞ்சு வயசு பெண்ணுக்கும்
சித்தாடை இருக்குங்க!

பள்ளிக்கூட பிள்ளைக்கி பட்டுக்கரை வேட்டிங்க!
பாடிஆடும் பொண்ணுக்கு பாவாடை துண்டு இருக்குங்க!
கொள்ளே காலம் பட்டுங்க—இது
கும்பகோணம் வேட்டிங்க!

நல்ல சாயம், கெட்டி நெசவு பாருங்க!
ஏமாத்து, பேமாத்து இல்லீங்க!
எல்லோரும் வந்தேதான் வாங்குங்க!

மதுரை புடவை வேணுமா?
மஞ்சப்பட்டு பாரம்மா!

தஞ்சாவூரு தறியில் நெய்த
தாட்டுப்பத்திரி சேலேம்மா!

புது மணப் பெண் மாப்பிளைக்கி
புடவை வேட்டி வேணுமா?
கொரநாட்டு கூறை சேலே வாங்குங்க!
குடும்பத்தில் சந்தோஷம் மிஞ்சுவுங்க!
கொழந்தைக்கி பஞ்சமே இல்லீங்க!

(3)

ஐயா வாங்க! அம்மா வாங்க!
ஐஸ்க்ரீம் பார்டர் புடவை;
ஐயம்பேட்டை புடவை!
'ஆதித்தன் கனவு' புடவை இருக்குது!—சினிமா—
வருஷம் அஞ்சானலும் கொஞ்சம்கூட
கிழியாது! கிழியாது! (ஐயா)

கோயம்பத்தூர் நூறும் நம்பர்
கோடம்பாக்கம் கெம்பு கலர்
மாயாவதி மாடல் இருக்குது—புடவை ரகம்
வகை வகையாக குவிஞ்சு இருக்குது!

திருநாகேஸ்வரம் துயிலி வேட்டி,
நகரி நெசவு அழுத்த வேட்டி,
சேலம் ஜரிகை வேட்டி வாங்குங்க!—எல்லாம் நானே
தினுசு, தினுசா வச்சிருக்கேங்க!

கெஜல்

ஆண்டி மடம், ஆரணி, அருப்புக்கோட்டை, இரணியல்,
அம்மாப்பேட்டை, ஈரோடு, புவனகிரி, கொரநாடு,
சின்னாளப்பட்டி—திடமான பட்டு
சீமை வரைக்கும் தெரியுங்க—தெரியுங்க! (ஐயா)

(4)

கெஜல்

இரண்டு கோடி நெசவாளர் இந்தியாவில் இருக்கின்றோம்
எங்க துணியை வாங்க மறுத்தால் என்ன செய்வோம்?

பாட்டு

அந்த நாள் வருமோ? எங்கள் குறை தீர!
நாளும் தறியை நம்பி நாங்கள்
பசியாலே வாடுகின்றோம்!

தொழிலை இழந்தோம்! துயரம் அடைந்தோம்!
சோகக் கதையாய் போனதே!

சுகத்தை என்று காண்போம்?
அந்த நாள் வருமோ? அந்த நாள் வருமோ?

4. கமலா

இயற்றியது : மருதகாசி பாடியது : வசந்தகுமாரி.

இருள் சூழும் வானில்—ஒளி வீசும் நிலவே
என் காதல் நிலவையுமே—
எப்போது காண்பேன் என் வாழ்விலே........ (இருள்)

வானில் அழகாக ஒளி வீசினாலும்
மாசு இல்லாத வடிவம் உண்டோ—நீ வானில்........
தேனினும் மிக இனிதான காதல் தேவன்; எந்தன் மோகன்
இன்பத் திருமேனி தனைப்போல ரூபம் உண்டோ
உனக்கு ரூபம் உண்டோ........(இருள்)

தேய்ந்து நிலையின்றி மறைகின்ற நிலவே
நீயும் அறிவாயோ என் காதல் நிலவை
வாழ்விலே என்றும் மாறாத கடமை வீரன் திருமாறன்—
எந்தன் மனம் நாடும் மணவாளன் வருவாரோ
மணம் புரிவாரோ!........(இருள்)

5. பங்கஜம்—பாலன்

இயற்றியது :
ராமையாதாஸ்

பாடியது :
கே. வி. மஹாதேவன், ராணி.

பங்க: அபராதம் ரூபா அம்பது
அகாரணமாக கையை பிடிச்சா
அபராதம் ரூபா அம்பது

பாலன்: அழகு ராணியே—கழுகு போலவே
உனது ஆசையாலே மெலிந்தேன்
அன்பின் கொடுமையாலே

பங்க: பழக பழகவே புரியுது பாலு
ப்ராடு கூட்டத்தில் நீ ஒரு ஆளு
அபராதம் ரூபா அம்பது

பாலன்: தன்மானம் உள்ள தமிழன்—பேச்சு
தவறவே மாட்டான் தமிழி

பங்க: தப்பிலி தனமா பேசியே தமிழன்
பேரைக் கெடுக்காதே தமிழா

பாலன்: நெஞ்சைத் தொட்டுப் பாரடி தமிழீ

பங்க: மோசம் செய்ய நினைக்குது தமிழா

பாலன்: கந்த மூலங்களை தின்றாலும்
இது கடமை தவறாது

பங்க: போதும் நிறுத்து........ [அபராதம்]
கற்கண்டுபோல் பேசிடுவாங்க—பிறகு
கருணைக்கிழங்கா மாறிடுவாங்க—ஆம்புளைங்க [கற்]
கப்ஸா—கிப்ஸா—டப்ஸா பேசி காலம் ஓட்டுவார்
அசந்தா கம்பி நீட்டுவார்

பாலன்: கண்ணான கண்ணுக்குட்டி—கலிகால சிங்கக்குட்டி
கைவிடமாட்டான் நிஜமா—கைவிடமாட்டான்

பங்க: அப்போ சத்தியமே நீ செய்திடவேணும்

பாலன்: தலையிலடிக்கிறேன் நம்பிடவேணும்

இருவரும்: ஜாலியாகவே பாலு பங்கஜம்
பாலும் நீரும்போல் மகிழ்ந்திட
மாலை மாத்தணும்

இயற்றியது : மருதகாசி **6. கமலா** பாடியது : வசந்தகுமாரி

இன்பம் கொள்ளுதே—எந்தன்
உள்ளம் துள்ளுதே—புது........ (இன்பம்)
வீசாத தென்றலே—வீசும் வாழ்விலே
மெய்யாக இனிமேலே
ஆசை தந்தையும் என் எண்ணம்போலே
அன்புடன் ஆசியே தந்ததால்........புது.... (இன்பம்)
அன்பெனும் தோணியை ஆதாரம் கொண்டேனே
ஆனந்தக் கரையை எளிதாகவே
அடைந்து மகிழ்ந்தேனே........
ஆசை தந்தையும் என் எண்ணம் போலே
அன்புடன் ஆசியே தந்ததால் புது (இன்பம்)
என் மனக் கோயிலில் வாழ்கின்ற தேவனையே
இல்லற வாழ்வில் துணையாகவே—ஏற்று மகிழ்வேனே
ஆசை தந்தையும் என் எண்ணம் போலே
அன்புடன் ஆசியே தந்ததால் புது........ (இன்பம்)

7. கமலா—மோகன்

இயற்றியது : மருதகாசி
பாடியது : வசந்தகுமாரி, திருச்சி லோகநாதன்.

கமலா: வான வீதியிலே பறந்திடுவோம்
வானம்பாடிகளாய் கானம் பாடிடுவோம்
மோக: தேனே நிலவுதனைப் பிடித்திடுவோம்
செண்டுபோல கையில் கொண்டு ஆடிடுவோம்
கமலா: காணாத காட்சியெல்லாம் நாமே கண்டிடுவோம்
கனிவாக பனிதூங்கும் மலை மீது தாவிடுவோம்
மோக: மானோடும் மயிலாடும் மாமேரு பாராய்
தேனோடும் காவேரி நதி காண வாராய்
கமலா: ஆனந்தமே எங்கும் ஆட்சி புரியுதே
மோக: அன்பே எந்தன் உள்ளமே மகிழுதே
கமலா: ஆஹாஹா........
மோக: ஆனந்தம்!........
கமலா: ஓஹோஹோ........
மோக: நம் சொந்தம்........ (வான)

8. ரிக்ஷாக்காரன்—பாலன்—பங்கஜம்

இயற்றியது : ராமையாதாஸ்

பாடியது : கே. வி. மஹாதேவன், ஏ. பி. நாகராஜன், யூ. ஆர். சந்திரா

ரிக்ஷா: கண்ணு தெரிஞ்சு நடக்கணும்—இந்த உலகத்திலே
யாரும் கண்ணுத் தெரிஞ்சு நடக்கணும்
இந்த உலகத்திலே........
பெண்களைக் கண்டா பல்லைக் காட்டிடும்
பேமானிகளும், கோமாளிகளும்
பேச்சுக்கு பேச்சு கிண்டல் செய்திடும்
சுண்டைக்காய்களும், வெண்டைக்காய்களும்

பாலன்: கண்ணு தெரிஞ்சு நடக்கணும்—இந்த உலகத்திலே
யாரும் கண்ணுதெரிஞ்சு நடக்கணும் இந்தஉலகத்திலே
வேலையில்லாத வெத்து வேட்டுகளும்
வெளிச்சம் போட்டு வரும் இளிச்சவாயன்களும்
மூளையில்லாத காளை மாடுகளும்
மூட்டையடிக்கிற முட்டாப் பசங்களும்........

பங்க: கண்ணு தெரிஞ்சு நடக்கணும் இந்த உலகத்திலே
யாரும கண்ணுதெரிஞ்சு நடக்கணும் இந்தஉலகத்திலே
ஏழைகளை தினம் ஏமாற்றிப் பொழைக்கும்
இம்டேஷன் கில்டு எம்டி பாக்கெட்டும்
பாழும் உலகிலே பகல் வேஷம் போடும்
படாடோபங்களும், பர்ஸனல்டிகளும்

ரிக்ஷா: கண்ணு தெரிஞ்சு நடக்கணும்—இந்த உலகத்திலே
யாரும்—(கண்ணு)
அண்ணைக்கி இருந்ததை நெனச்சு பாக்கணும்
ஆசைக்கெல்லாம் ஒரு அளவு இருக்கணும்

பாலன்: எண்ணைக்கும் மாடாக வண்டியை இழுக்கணும்
ரெண்டணு காசுக்கு திண்டாட்டம் போடணும்

பங்க: என்னையும் உன்னையும் இழுத்துப் போகணும்
எதித்து பேசினு பல்டி அடிக்கணும்

ரிக்ஷா: பொம்புளே சொல்றதை ஆம்புளே கேக்கணும்

பாலன்: புத்தியைக் கேட்டா கூஜாவைத் தூக்கணும்

பங்க: பொழப்பத்த பசங்க அதையும் செய்யணும்

பாலன்: புள்ளே பூச்சியா அவனும் துடிக்கணும்........

எமது அடுத்த வெளியீடு

?

எதிர்பாருங்கள்

சங்கீதா பிக்சர்ஸ்

480, திருச்சி ரோட்

கோயம்பத்தூர்.

பிரபாத் பிரஸ், வேலூர். போன் 92